

திருச்சி காவேரி ரயில்வே மஹாலில் உறையூர் ஏ.எம். பாண்டியன் இல்ல திருமண விழாவில் மணமக்கள் பாண்டியன் – தனலெட்சுமி ஆகியோரின் திருமணத்தை திமுக இளைஞரணி செயலாளரும் தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். உடன் தமிழக நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி சிவா எம்.பி., மாநகர கழக செயலாளர் மதிவாணன், சட்ட மன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் மற்றும் மணமக்கள் பெற்றோர் உள்ளனர்.



நேற்று முன்தினம் (20.02.2025) கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நடைபெற்ற பல்கலைக்கழக மானியக்குழுவின் ” வரைவு நெறிமுறைகள் 2025 குறித்த தேசிய மாநாட்டில் கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

### குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை

# குழந்தை நலக் குழுவிற்கு தலைவர் - உறுப்பினர்கள் நியமனம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, பிப்.22-

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் விதிமுறைகளின்படி கன்னியாகுமரி, கடலூர், கோயம்புத்தூர், ஈரோடு, தேனி, தூத்துக்குடி, வேலூர்,நாமக்கல்,திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள குழந்தை நலக் குழுவிற்கு தலைவர் (ம) உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குழந்தை நல குழுவிற்கு ஒரு பெண் உட்பட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அரசால் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர் மற்றும் இப்பதவி அரசு பணி அல்ல.

விண்ணப்பதார் குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம் அல்லது சமூகப்பணி அல்லது சமூகவியல் அல்லது மனித உடல் நலம் அல்லது கல்வி அல்லது மனித மேம்பாடு அல்லது மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றில் பட்டம் பெற்றும் குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்; (அல்லது) குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம் அல்லது சமூகப்பணி அல்லது சமூகவியல் அல்லது மனித உடல் நலம் அல்லது கல்வி அல்லது மனித மேம்பாடு அல்லது மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்று தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும்.

மேலும் பத்திரிக்கையில் செய்தி வெளியிடும் நாளில், விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும் 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும். மூன்றாண்டுகளுக்கு மேல் குழந்தை நலக் குழுவின் தலைவராகவோ அல்லது உறுப்பினராகவோ நியமனம் செய்யப்படமட்டாது.

இதற்கான விண்ணப் படிவத்தை அந்தந்த மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது துறை சார்ந்த இணையதள முகவரியிலிருந்து (https://dsdcpimms.tn.gov.in)விண்ணப்பத்தாரர் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தகுதிவாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில் 28.02.2025 (வெள்ளிக் கிழமை) மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கப்ப பெறுமாறு விண்ணப்பிக்க லாம். குழந்தை நலக் குழு தலைவர் மற்றும் உறுப்பினருக்கான விண்ணப்பம் தனித்தனியாக அனுப்பப்பட வேண்டும்.

இயக்குநர், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 010. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும் –

# மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு கடிதம்!

சென்னை, பிப். 22-

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 3 மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்களை 19.02.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட உடனடியாக தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கூட்டு பணிக்குழுக் கூட்டத்தினைக் கூட்ட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (20.02.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் 9.2.2025 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விரிவான பதிலுக்கு நன்றி தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், 19.2.2025 அன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த

10 மீனவர்கள், அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவத்தினை ஒன்றிய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் கடந்த சில மாதங்களில் வேகமாக அதிகரித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரம் நீண்ட காலம் பாதிக்கப்படுவதால், இத்தகைய கைது நடவடிக்கைகளைத் தடுத்திட உடனடி மற்றும் தொடர்ச்சியான தூதரக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே, மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அதிகாரிகளிடமிருந்து விடுவிக்க ஏதுவாக, உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இந்த நீடித்த பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண தான் ஏற்கனவே வலியுறுத்திய படி கூட்டுப் பணிக்குழுக் கூட்டத்தினைக் கூட்டுவதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர்

டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை

# விவசாயிகளும் - பொதுமக்களும் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்!

## தி.மு.க. விவசாய அணி கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப்.22-

தி.மு.க. விவசாய அணியின் மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 18.02.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் ஏ.கே.எஸ்.விஜயன், தி.மு.க. விவசாய அணி செயலாளர் அவர்களின் முன்னிலையிலும், விவசாய அணி துணைத் தலைவர்கள் இரா.தமிழ்மணி மற்றும் எஸ்.கே.வேதரத்தினம் ஆகியோரின் தலைமையிலும் நடைபெற்ற கூட்டத்தில் இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர், ஆர்.அருட்செல்வம் கள்ளிப்பட்டி மணி, ம.முத்துராமலிங்கம், செஞ்சி பா.செந்தமிழ் செல்வன் குறிஞ்சி என். சிவகுமார், மற்றும் துணைச் செயலாளர்கள், முதுகுளத்தூர் கே.முருகவேல், ஆர்டி.ஏ. ஆதிசேஷன், ஆர்.கணேசன், டி.எம்.அரியப்பன், டேம் டி.வெங்கடேசன், என். நல்லசேதுபதி, ஜித்து (எ) ராஜரத்தினம், தங்க சித்தார்தன், குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை அந்தந்த மாவட்டங்களில் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் பயன்பெறுகின்ற வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என விவசாய அணியின் சார்பாக மாவட்ட ஒன்றிய மாநகர, நகர அமைப்பாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் மற்றும் கழகத் தலைவர் அவர்களின் சாதனைகளை விளக்கி நமது அணியின் சார்பாக மண்டல வாரியாக தமிழகம் முழுவதும் மாநாடு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. மாநாடு நடைபெற அந்தந்த மாவட்ட பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்களை அனுகி அனுமதிபெற்று நடத்திட வேண்டுமென தீர்மானிக்கப்படுகிறது.

2009-ஆம் ஆண்டு அத்திக்கடவு அவினாசி திட்டம் தொடங்குவதற்கு அரசாணை எண்.296, PW(Q1), 14.12.2009-ஐ வெளியிட்டு பணியினை தொடங்கி வைத்தவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதனை கவனத்தில் கொள்ளாத முந்தைய அ.தி.மு.க. அரசு தற்போது தாங்கள் செய்ததாக வெறும் சுய விளம்பரத்திற்காக பெருமை தேடிக்கொள்வது கண்டிக்கத்தக்கது. இத்திட்டத்தை தனிக் கவனத்துடன் முழு வீச்சில் செயல்படுத்துவதற்கு கடந்த 2 ஆண்டுகளில் அனைத்து விவசாயிகளையும் முழுமையாக ஒருங்கினைத்து நிலம் கையகப்படுத்துகின்ற பணியினை எந்த பாகுபாடுகளும் பார்க்காமல் அந்தப் பகுதி விவசாயிகளின் நூற்றாண்டுகாலக் கனவுத் திட்டத்தை நிறைவேற்றித் தந்த பெருமையும் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களையேச் சாரும்.

திராவிடமாடல் நான்கு ஆண்டுகால ஆட்சியில் தொடர் வெற்றிகளில் ஈரோடு இடைத்தேர்தலில் மகத்தான வெற்றிபெற்ற கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு பணியாற்றிய அந்த தொகுதி மக்களுக்கும் வாக்காளர்களுக்கும் திராவிட மாடல் ஆட்சியை சிறப்பாக தந்து கொண்டிருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் முதல்வர் தளபதி அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறது .

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட டபீர் தெருவில் உள்ள அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் 15 வகுப்பறைகள் கட்டுவதற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், மயிலாடுதுறை நகர கழக செயலாளரும், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவருமான குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேஷன் செயற்குழுக் கூட்டம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் தற்காப்புக் கலைப் போட்டி!

## மாஸ்டர் பெ.சேகர் தலைமையில் தீர்மானம்!

சென்னை, பிப்.22-

கழகத் தலைவர் பிறந்த நாளையொட்டி மாபெரும் தற்காப்புக் கலைப் போட்டி கழகத் தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ. சேகர் தலைமையில் நடந்த தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோஷியேஷன் செயற்குழுக் கூடடத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேஷன்' அமைப்பானது 1994-ஆம் ஆண்டு முறையாகப் பதிவு செய்யப்பெற்று, மிகவும் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இவ்வமைப்பானது ஒலிம்பிக் விளையாட்டிலுள்ள தேக்வாண்டோ தற்காப்புக் கலையைப் பரப்பவும், வளர்க்கவும் உருவாக்கப்பட்டது மட்டுமல்ல, இளந்தலைமுறையினரைப் போதைப் பொருள் பழக்கங்களிலிருந்து அன்னியப்படுத்தி அவர்களின் உடலாற்றலை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டதாகும்.

தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேஷன் செயற்குழுக் கூட்டம் 9.2.2025 அன்று சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2023-2024 தேர்தலில் தேர்வு செய்யப்பட்டுள்ள நிருவாகிகள், மாஸ்டர் பெ.சேகர், சே.லோகராஜ், எஸ்.ரேவதி, மா.ஆறுமுகம், து.சந்துரு, அ. ஜெயசூர்யா, கு.தேவதாஸ், ஜெகநாதன், தச. எழிலன், மு. சண்முகம், மு. குமரன், ம.கணேஷ், ஜி.வெங்கடா ஜலபதி, ஆ.ராசேந்திரன், கே.சி. முருகன் ஆகியோருக்கு வாழ்த்துத் தெரிவித்துத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இலக்கியம், அரசியல், வசனப்புரட்சி வாயிலாகச் சமூகத்தில் பல சீர்த்திருத்தங்களைச் செய்து ஐந்து முறை தமிழ்நாடு முதலமைச்சராக இருந்து ஆக்கபூர்வமாகச் சிந்தித்து, செயலாற்றித் தமிழ்நாட்டை சீரிய முறையில் வடிவமைத்த சிற்பியாகத் திகழ்ந்து மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாளில் மாஸ்டர் பெ. சேகர் தொகுத்த 'கலைகளின் இதயம் கலைஞர்' நூல் வெளியீட்டு விழாவும், தி.மு.க. தொண்டரணி சார்பில் 20.10.2024 அன்று சென்னையிலுள்ள முத்தமிழ்ப் பேரவையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு முழு ஒத்துழைப்பு நல்கிய தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேசன் நிருவாகிகளுக்கு இக்கூட்டத்தில் நன்றி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்ற றப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் தி.மு. கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவினை தி.மு.கழகத் தொண்டரணி சார்பில் ஒலிம்பிக் விளையாட்டிலுள்ள தேக்வாண்டோ தற்காப்புக் கலைப் போட்டியினை நடத்திடவும், ஏழை, எளியவர்களுக்கு உணவு, உடை வழங்கிடும் நிகழ்வுக்குத் தமிழ்நாடு யூத் தேக்வாண்டோ அசோசியேஷன் நிருவாகிகள் முழு ஒத்துழைப்பு வழங்குவதெனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.



கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நேற்று முன்தினம் (20.02.2025) நடைபெற்ற பல்கலைக்கழக மானியக்குழுவின் ”வரைவு நெறிமுறைகள் 2025 குறித்த தேசிய மாநாட்டில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கலந்து கொண்டு உரையாற்றினார்.